கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணிப் பரீட்சை ஆண்டு I (நிகழ்நிலை) – 2021

## சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. ''சட்டம் உறுதியானதாக இருக்க வேண்டுமே தவிர, அது இயங்கா நிலையுடையதாக இருக்க முடியாது. எனவே, சட்டத்தைப் பற்றிய அனைத்து சிந்தனைகளும் நிலையான தன்மையின் தேவை மற்றும் மாற்றத்தின் தேவை ஆகிய முரண்பட்ட கோரிக்கைகளை சமரசம் செய்யப் போராடுகின்றது.''

   மேற்கூறிய கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? ஏதேனும் இரண்டு சட்ட சிந்தனைப் பிரிவுகளுடன் (*Schools of Legal Thoughts*) தொடர்புறுத்தி ஆராய்வதுடன், உதாரணங்களால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

   (100 புள்ளிகள்)

2. ''போட்டியொன்றில் அல்லது பிணக்கொன்றிலிருந்து அதன் வடிவத்தை எடுத்துக்கொள்வது எதிரிடைவாத செயல்முறை நடைமுறைகளாகும்: தீர்ப்பொன்றினை எட்டுவதனை பிரதான கடமையாக கொண்ட ஒப்பீட்டளவில் அமைய வழித்தீர்வொன்றினை முடிவெடுப்பவரின் முன் இரு எதிரிடைவாதிகளின் ஈடுபாட்டை அது வெளிப்படுத்துகிறது. எதிரிடைவாத முறை அல்லாத முறைமை அதிகாரபூர்வ விசாரணைக் கட்டமைப்பொன்றாக உள்ளது.''

   இவ்விரு முறைமைகளிலும் 'நீதிபதியின் வகிபங்கினை' குறிப்பாக தொடர்புறுத்தி மேற்போந்த கூற்றின் வலிதுடைமை தொடர்பில் நுணுக்கமாகக் கருத்துரை செய்க.

   (100 புள்ளிகள்)

3. ‘‘மாத்ரு’’ என்பது சந்தார் மாநிலத்தின் கரையோரப் பகுதியில் வசிக்கும் சிறு மீனவச் சமூகமொன்றாகும். அச்சமூகத்தின் அனைத்து ஆண் உறுப்பினர்களும் 15 வயதை எட்டியதும் மீன்பிடித்தலின் நடைமுறை மற்றும் தொழில்நுட்பத் திறன்களைப் பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது அச்சமூகத்தின் நடைமுறையொன்றாகும்.

ஜனவரி 2021இல், சந்தார் அரசாங்கம் ‘‘1956இன் பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகள்’’ சட்டத்தை திருத்தியது. திருத்தப்பட்ட சட்டத்தின் [2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க] பிரிவு 9 குறிப்பிடுவதாவது, ‘‘எந்தவொரு கப்பலின் தலைவனும் பதினாறு வயதுக்குட்டபட்ட எந்தவொரு நபரையும் பணியில் அமர்த்தலாகாது.’’ மாத்ரூவின் கிராம அலுவலர் இச்சட்டத்தின் மாற்றம் குறித்து சமூகத்திற்கு அறிவுறுத்தினார். இருப்பினும், 15 வயதை எட்டிய பிறகு மீன்பிடியில் ஈடுபடுவது நீண்டகாலப் பாரம்பரியம் என்றும் தங்களுடைய கலாசாரம் மற்றும் வாழ்வாதாரத்துடன் நெருக்கமாகத் தொடர்புடையதென்றும் அச்சமூகம் திருத்தப்பட்டுள்ள சட்டத்தின் அதிருப்தி கொண்டது. மேலும், உரிய நேரத்தில் தங்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படாவிட்டால் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர். அச்சமூகத்திலுள்ள முதியோர் சமூகமொன்று இச்சட்டத்தைக் கேள்விக்குட்படுத்த விரும்புவதோடு, அவ்வழக்காற்றின் வலிதுடைமை குறித்து உமது ஆலோசனையை நாடுகின்றது.

பொருத்தமான வழக்குகளின் பின்னணியில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குக. சந்தாரின் சட்ட அமைப்பானது இலங்கையினதைப் போன்றதெனக் கருதிக்கொள்க.

(100 புள்ளிகள்)

4. லேக்லேண்ட் என்ற அரசாங்கமானது, 2021இல் ‘‘பிறிதொரு மனித உடலுக்கு எதிரான அனைத்து வகையான மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான நடாத்துகைத் தடைச் சட்டம்’’ என்ற சட்டத்தினை இயற்றியது.

அச்சட்டத்தின் பிரிவு 3 ஆனது:

‘‘எந்தவொரு நபரின் உடலுக்கும் கேடு விளைவிக்கும் அல்லது தவறாக நடத்தும் எந்தவொரு மனிதாபிமானமற்ற செயலிலும் எவரும் ஈடுபடக்கூடாது.’’

லேக்லேண்டின் பிரசையானயொருத்தியான சோமயா என்பவள் மதவெறுப்பு மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் தொடர்பில் செயற்படும் புகழ்பெற்ற சமூக ஆர்வாலர்

ஒருத்தியாவாள். ‘‘வெறுப்பை நிறுத்து, கருணையைப் பரப்பு’’ என்ற தொனிப்பொருளில் பிரச்சாரத்தை அவள் முன்னெடுத்தாள். அது சமூக ஊடகங்களை ஆக்கிரமித்தது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த குழுவொன்று சோமயாவின் பிரச்சாரங்கள் ஒரு குறிப்பிட்ட மதச் சமூகத்தினை குறிவைத்து சமத்துவத்தை ஊக்குவிக்கும் போர்வையில் அவளது YouTube அலைவரிசையினை மேலும் பிரபல்யப்படுத்துவதனை நோக்காகக் கொண்டதென வாதிட்டது. நவம்பர், 2021இல், சகிப்புத்தன்மையற்ற சமூகத்தைச் சேர்ந்த குழுவொன்று சோமயாவின் வீட்டிற்கு தீ வைத்ததுடன் அவளது மடிக்கணனி, அவணங்கள் மற்றும் பிற தொழிநுட்ப சாதனங்கள் உட்பட அவளது உடைமைகள் அனைத்தும் அழிந்தன. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சோமயாவுக்கு எதிராகச் செயல்பட்ட குழுவினர், ‘மூளையற்ற பெண்ணுக்குக் கடவுளின் பரிசு’ என்ற தலைப்பில் எரிக்கப்பட்ட வீட்டின் சில புகைப்படங்கள் உள்ளடக்கிய ஒளிநாடாவொன்றினைச் சமூக வலைதளங்களில் பகிர்ந்தனர். டிசம்பர் 2021இல், மேற்கூறிய குழுதான் இந்தச் சம்பவத்திற்குக் காரணமெனக் கூறி சோமயா காவல் நிலையத்தில் புகாரொன்றினைச் செய்தாள். அதற்கமைய, அந்தக் குழுவின் சில ஆர்வலர்களை காவல்துறை கைது செய்யதோடு அவர்கள் மீது மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் குற்றம் சாட்டியது. இக்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் எரிக்கப்பட்ட வீட்டின் புகைப்படங்கள் மற்றும் ஒளிநாடாக்களைப் பகிர்வது, ‘‘மற்றொரு மனித உடலுக்கு கேடு அல்லது தவறான நடாத்துகை’’ என்ற வரையறையின் கீழ் வராதென சந்தேக நபர்கள் வாதிடுகினறனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தாங்கள் எவ்விதமான தீக்கிரை செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை எனவும் தமது கருத்துக்களை மாத்திரமே வெளிப்படுத்துவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதியெனக் உம்மைக் கருதிக்கொண்டு, குறித்த சட்டப் பிரிவினை பொருள்கோடல் செய்வதற்கு நீர் பயன்படுத்தக்கூடிய பொருள்கோடல் விதிகளை ஆராய்க. லேக்லேண்டின் சட்டமுறைமையானது இலங்கையினதைப் போன்றதெனக் கருதுக.
(100 புள்ளிகள்)

5. X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்று இலங்கையின் உயர் நீதிமன்றில் மூன்று நீதிபதிகளைக்கோண்ட அமர்வொன்றின் முன் வாதிடப்படுகின்றது. உமது விடையை உறுதிப்படுத்த பொருத்தமான அதிகாரங்களை ஆதாரங்காட்டி கீழ்வரும் தீர்ப்புக்களின் ஏற்புடைமையை ஆராய்க:

(அ.) X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் 2019ஆம் ஆண்டில் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதியைக் கொண்ட குழாமொன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று.

(ஆ.) X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் 2018இல் இலங்கை உயர்நீதிமன்றத்தின் நிறை குழாமினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று.

(இ.) X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் நவம்பர் 2011இல் இந்திய உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று.

(ஈ.) X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கையிலிருந்து செய்யப்பட்ட மேன்முறையீட்டில் கோமறைக் கழகத்தின் தீர்ப்பொன்று.

(25X4=100 புள்ளிகள்)

6. COVID 19 பெருந்தொற்றுக்கு பின்னராக இலங்கையில் தற்போதுள்ள பிணக்குத் தீர்வுக்கான மாற்றுவழி முறைமையை (ADR) நவீனமயமாக்குவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட துணைக்குழுவின் அங்கத்தவரொருவர் என உம்மை கருதுக. தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை உதாரணங்களை மேற்கோள் காட்டி மத்தியஸ்தம் மற்றும் நடுத்தீர்ப்பு ஆகிய இரண்டு தொடர்பிலும் வரையறை செய்யும் சட்ட சீர்திருத்தத்திற்கான வரைபு முன்மொழி வொன்றைத் தயாரிக்க.

(100 புள்ளிகள்)

******